Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.124/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 Page.No.42/2021

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சித்திக் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சாதிக் | தொழில் | பெயின்டர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 23 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 10th day of August 2021.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை.-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெயின்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 30 மாதங்களுக்கு முன்பு தேதி நினைவில் இல்லை. நான் ஐஸ் வாங்கி வருவதற்காக மாலை சுமார் 03.00 மணிக்கு ஆஞ்சிநேயர் கோயில் பக்கம் சென்றிருந்தேன். அப்போது அங்கு இருந்த 1ம் எதிரி அருண்குமார் செங்கல்லால் என் வாயின் மீது அடித்தார். அதனால் எனக்கு பல் மொத்தமும் விழுந்துவிட்டது. 2ம் எதிரி முத்துவேல் என் தலையின் மீது கொட்டினார். 3ம் எதிரி அருண் கையால் என் கண்ணத்தில் ஓங்கி அடித்தார். அடித்துவிட்டு பின்பு எதிரிகள் 3 பேரும் தேவிடியா பையா வெளியே ஏதாவது இது பற்றி சொன்னால் உன்னை மறுபடியும் அடி வெளுத்துவிடுவோம் என்று கூறி மிரட்டினார்கள். என்னை 1ம் எதிரி அருண்குமார் அடிக்க பயன்படுத்திய செங்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்து செங்கல்லால் தான் 1ம் எதிரி அருண்குமார் என்னை தாக்கினார். வழக்கு சொத்து செங்கல் அ.சா.பொ.1 ஆகும். பிறகு நான் வீட்டிற்கு சென்றவுடன் எனது அப்பா என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.-**

எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வந்துதான் குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டதன் படி போதிய வாய்ப்பு வழங்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை கு.வி.மு.ச.பிரிவு 309ன் கீழ் முடிக்கப்படுகிறது.

Signature of Witness.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.124/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 Page.No.42/2021

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சபிக் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சையத்கரிம் | தொழில் | தள்ளுவண்டி வியாபாம் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 10th day of August 2021.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை.-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தள்ளுவண்டி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது அண்ணன் மகன் ஆவார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக 16.06.2018ம் ஆண்டு தேதி 14ஆ அல்லது 16 ஆ என்று தேதி சரியாக நினைவில் இல்லை. அன்று மதியம் சுமார் 01.30 மணியளவில் நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுகொண்டு இருந்தபோது அ.சா.1 ன் தம்பி பாரூக் என்னிடம ஓடி வந்து அண்ணனை அடித்துவிட்டார்கள் அவரது வாயில் இருந்து இரத்தம் வருவதாக கூறினார் நான் உடனே சென்று பார்த்தேன் அ.சா.1ன் வாயில் இரத்தமாக இருந்தது, 3 பற்கள் கீழே விழுந்திருந்தது. நான் உடனே திருப்பத்தூர் நகர காவல் நிலையத்திற்கு அ.சா.1யை அழைத்துசென்றேன் அவர்கள் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளிக்க அறிவுருத்தினார்கள் அதன் படி நான் அரசு மருத்துவமனையில் அ.சா.1யை சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.-**

எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வந்துதான் குறுக்கு

விசாரணை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டதன் படி போதிய வாய்ப்பு வழங்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை கு.வி.மு.ச.பிரிவு 309ன் கீழ் முடிக்கப்படுகிறது.

Signature of Witness.